விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 23
ஒலி 299 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 27 வெள்ளிக்கிழமை (14.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalaijaffna@gmail.com
1500/= + 500/=

## வெடுக்குநாறி ஆலய வழக்கு நிர்வாகத்தினர் விடுதலை


(வவுனியா)

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் தொடர்பாக தொடரப்பட்ட வழக்கில் இருந்து ஆலயத்தின் நிர்வாகத்தினர் தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், சம்ப 11

### தமிழர்கள் என்ன செய்தாலும்

## எதிராக கருத்துக்கள் வெளியிடும் விமல் மனநலம் பாதிக்கப்பட்டவர்

### சிறீதரன் எம்.பி சாடல்



(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் என்ன செய்தாலும் அதற்கு எதிரான கருத்துக்களையே பேச வேண்டும் என்று நினைக்கின்ற மனநிலை பாதிக்கப்பட்டவராகவே விமல் வீரவன்ச சிங்களதேசத்தில் பார்க்கப்படுகிறார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 11

### காலநிலை மாற்றம்

## இலங்கை பாதிக்கப்பட்டுள்ளது எரிக் சொல்ஹெய்ம்

(கொழும்பு)

காலநிலை மாற்றத்தால் இலங்கை மிகவும் பாதிப்படைவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச ஆலோசகர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் 11




### சகல ஒத்துழைப்பினையும்

# வட பகுதிக்கு வழங்குகின்றோம்

### யாழில் கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

எம்மாலான சகல ஒத்துழைப்புக்களையும் வடபகுதிக்கு வழங்கி வருகின்றோம் என பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன யாழில் வைத்து தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச்சபையின் தலைமை அலுவலக கட்டடம் நேற்று கைதடியில் திறந்து வைக்கப்பட்டபோது கருத்து தெரிவிக்கையிலேயே ரமேஷ் பத்திரன இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது அரசாங்கத்தில் முன் 11

### யாழ்., முல்லை உட்பட

## 10 மாவட்டங்களில் டெங்கு அபாயம்

### சுகாதார அமைச்சு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உட்பட பத்து மாவட்டங்களில் தொடர்ந்தும் டெங்கு அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

கொழும்பு, களுத்துறை, கண்டி, கம்பஹா, மாத்தளை, காலி, யாழ்ப்பாணம், முல் 11

## ராஜபக்ஷவினருக்கு நேர்ந்த கதியே ஜனாதிபதி ரணிலுக்கு ஏற்படும்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

ராஜபக்ஷவினருக்கு நேர்ந்த கதியே ஜனாதிபதி ரணிலுக்கு ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கம்பளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே அவர் இதனை கூறியுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட தினத்தில் தான் கயிற்று பாலத்தில் கரையேற நேரிட்டுள்ளதாக கூறினார். எனினும் தற்போது அந்த கயிற்று பாலத்தின் மூலம் ராஜபக்ஷ குடும்பத்தின் இள 12

## யாழ்ப்பாண பனம்கள்ளு எனக்குக் கிடைக்கவில்லை

### யாழில் இராஜாங்க அமைச்சர் லொகான் நகைச்சுவை



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பனைமரங்கள் இருக்கின்றபோதும் பனம்கள்ளை பெறுவதற்கான வழிவகைகள் தனக்கு கிடைக்கவில்லை என பெருந்தோட்ட கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் 11

## மக்களின் நிலைப்பாட்டை அறிய தேர்தல் வேண்டும்

### ரஞ்சித் மத்தும பண்டார

(கொழும்பு)

தேர்தல் ஒன்றை நடத்தி மக்களின் நிலைப்பாட்டை அறிந்துகொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

குறைந்த வருமானத்தை பெறும் நாடாக இலங்கையை மாற்றிய அனைவரும் தங்களது பதவிகளில் இருந்து விலகிச் செல்ல வேண்டும் எனவும் அவர் மேலும் 11

## அரசுக்கு எதிராக 2 ஆவது சுனாமி அலை வருமென ரணிலுக்கு அச்சம்

### நளின் பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு எதிரான இரண்டாவது சுனாமி அலை வருமென்கிற கடும் பயத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், போராட்டக்காரர்களுக்கு பயங்கரவாத முத்திரையை குத்தவே ரணில் தொடர்ந்து முயல்கிறார்.

வசந்த முதலிகே பயங்கரவாதத் தடைச் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**அரசுக்கு...**

சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். போராட்டக்காரர்களை புனர்வாழ்வுக்குட்படுத்தவும் சட்ட மூலங்கள் கொண்டுவரப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார். (ம-7)


**வேலையாட்கள்**

**தேவை**

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்துக்கு அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுனர் இருபாலாரும் விரும்பத்தக்கது. (13121)

தொடர்புகளுக்கு

**076 659 5578**


புனர்வாழ்வு பணியகம் சட்டம்

# போராட்டக்காரர்களுக்காக உருவாக்கப்படவில்லை

## நீதியமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

புனர்வாழ்வு பணியகம் சட்டம், போராட்டத்தில் பங்குபற்றியவர்களை இலக்கு வைத்து உருவாக்கப்படவில்லை என இலங்கையின் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை தண்டிக்கவே இந்த சட்டத்தை பயன்படுத்த அரசாங்கம் முயற்சிப்பதாகச் சிலர் கருதுகின்றனர்.

எனினும் அது தவறான செய்தியாகும் என்று விஜயதாஸ குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மற்றும் கிழக்கில் மோதல்கள் முடிவுக்கு வந்த நிலையில் நீண்ட காலத்துக்கு முன்னரே புனர்வாழ்வு பணியகம் திட்டம் வரையப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார்.

போருக்குப் பின்னரான காலத்தில் அவர்களுக்கு புனர்வாழ்வளிக்க எந்த சட்டக் கட்டமைப்பும் இல்லை, அதன் விளைவாக, அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கக்கூடிய சட்ட கட்டமைப்பை அறிமுகப்படுத்த அரசாங்கம் தொடர்ச்சியாக பரிசீலித்து வருவதாக அவர் கூறியுள்ளார்.

இது ஆரம்பத்தில் சரணடைந்த விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கும் நோக்கத்துடன் இருந்தது.

ஆனால் பின்னர், அது போதைக்கு அடிமையானவர்களுக்கு விரிவடைந்தது.

2019ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தாக்குதலின்போது தவறாக நடத்தப்பட்டவர்களுக்கும் இந்த சட்டத்தின்கீழ் மறுவாழ்வு அளிக்கப்பட்டால், அது, சமுதாயத்துக்கும் நன்மை பயக்கும் என்று விஜயதாஸ குறிப்பிட்டுள்ளார். (ம-7)


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
## பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல்
## ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்

வட்டாரம் 15
ஆதன இல:-77/40 (உத்தேச)
வீதி: அம்பலத்துறை ஒழுங்கை
கிராம சேவையாளர் பிரிவு:- J/144
வலி தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு,

எமது இடாப்பில் மேற்குறிப்பிடப்பட்ட இலக்கத்தில் அமைந்துள்ள இவ் ஆதனமானது, உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று மாகியப்பிட்டி இறை: "முதலைக்குளியும் அப்பிலாக்கையும்" நிலப்பரப்பு. 7ம் குளி 04.08ம் இதில் கிழக்கு எல்லை அருகாக ஏழு (7). அடி அகலமான தனி நிலத்துப் பாதைக்காக விடப்பட்ட குளி 4.08 நீக்கி மிகுதியில் நிலப்பரப்பு மூன்று (3) கொண்ட இவ் ஆதனமானது உறுதி இலக்கம் 2181/04.10.2017 (திரு.பொ.சுந்தரலிங்கம்), அவர்கள் முகதாவில் எழுதப்பட்ட இவ் ஆதனம் மாகியப்பிட்டி சண்டிலிப்பாய் குமாரசுவாமி சிவசுப்ரமணியமும் பெண் மனோன்மணியும் ஆகியவர்களால் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் சின்னத்துரை விவேகானந்தன் அவர்களிற்கு அறுதியாக வந்தடைந்தமையினை உறுதிப்படுத்தி எமது பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலக (மாதகல்). ஆதனவரிப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. V.தவராசா அவர்களால் 02.08.2021ம் திகதிய 2977ம் இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு 2 குளி 16.05 கொண்ட லொட் 1 எனச் சுட்டப்பட்டுள்ள ஆதனமாகும். "முதலைக்குளியும் அப்பிலாக்கையும்" எனப் பெயர் கொண்ட இவ் ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு யாரும் ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்காதவிடத்து குறித்த ஆதனமானது சின்னத்துரை விவேகானந்தன் எனும் பெயருக்கு ஆதனப் பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் எவ்வித குறைபாடுகள், பிரச்சினைகள், பிசகு தடைகளிற்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி ஆக மாட்டாது என்பதனையும் அறியத் தருகின்றேன்.

**எல்லைகள்**

கிழக்கு: குறித்த ஏழு அடி அகலமான தனித்துவப் பாதை;
வடக்கு: மிகுதி ஆதனம்
மேற்கு: இராமலிங்கம் பெண் அன்னம்மாவின் ஆதனம்;
தெற்கு: ஒழுங்கை இவ்வெல்லைப்படி இது முழுவதும் இன்னும் குறித்த தனித்துவப் பாதை பாவிப்புரித்தும் இதடங்கலும்




**திரு. அ. ஜெபநேசன்**
தவிசாளர்,
வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய். (13110)



**தவறவிடப்பட்டுள்ளது**

அமிர்தலிங்கம் இராஜசிங்கம் ஆகிய எனது தே.அ.அட்டை (இல.501432563V) பருத்தித்துறை.- கரவெட்டிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள்

**074 121 6217, 021 226 0284**

என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

(C-5090) **(சன்மானம் வழங்கப்படும்)**


## விண்ணவரோடு மகிழ்ந்து
## ஆண்டு மூன்று



**எ. அன்ரனி ஜெயரட்ணம்**

தோற்றம் 04.12.1946 மறைவு 15.10.2019

**அ. அகிலாண்டதேவி**

தோற்றம் 31.12.1951 மறைவு 01.10.2019

அந்தோனியாரில் அளப்பரிய பக்தி கொண்டு
அவர் திருப்பணி தினம் செய்து வந்தீர்
எள்ளையும் ஏழாய்ப் பகிர்ந்து
இல்லையென்னாது வருவோர்க்கு கொடுத்து
இல்லறத்தில் நல்லறம் செய்தீர்
எம் உள்ளக் கோவிலில்
என்றும் உம் நினைவுகள் வாழும்.

இவர்களின் ஆன்ம இளைப்பாற்றுக்காக 14.10.2022 வெள்ளிக்கிழமை மாலை 4.30 மணியளவில் ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். 15.10.2022 சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**ஏழாலை கிழக்கு, ஏழாலை.** (13120) **குடும்பத்தினர்**

## ஆத்மசாந்தி பிரார்த்தனையும் நன்றி நவிலலும்

மண்ணில் 04 - 08 - 1937

விண்ணில் 14 - 09 - 2022



அமரர்

## இராசதுரை இராசமணி

எங்கள் அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி அறிந்து இறுதி வைபவத்தில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த அன்புள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு அன்னாரின் நினைவுப் பிரார்த்தனை வைபவத்திலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**நாவற்காடு,**
**அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.** (C-5088)

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பினால் உர விநியோகம்

(சாவகச்சேரி)

கைதடி கமநல சேவை நிலைய எல்லைக்குட்பட்ட நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பின் அங்கத்தவர்களுக்கு இன்று வெள்ளிக்கிழமை கைதடி கமநல சேவை நிலையத்தில் உர விநியோகம் இடம்பெறும் என நாவற்குழி கிழக்கு கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர்.

உர விநியோகத்தை பெற வரும் நெற்செய்கையாளர்கள் ஏக்கர் வரி பற்றுச்சீட்டு மூலப் பிரதியுடன் போட்டோ பிரதி, குடும்ப பதிவு அட்டை மூலப் பிரதியுடன் போட்டோ பிரதி, தேசிய அடையாள அட்டை ஆகியவற்றுடன் காலை 8.30 தொடக்கம் பிற்பகல் 4மணிக்கு இடையில் வருகை தந்து உரத்தினை பெற முடியும். குறித்த உர விநியோகம் பரப்பு ஒன்றிற்கு 350கிராம் என்ற அடிப்படையில் ஒரு கிலோ 200 ரூபாய்க்கு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தேனைப் பசளை மற்றும் திரவ உரம் தேவைப்படும் விவசாயிகள் அதற்கான விண்ணப்பங்களை கோரிப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் கமக்கார அமைப்பினர் தெரியப்படுத்தியுள்ளனர். (4-30)

# மணல் ஏலவிற்பனை

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றின் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட மணல் எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பிராந்திய ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

ஏலவிற்பனை ஆரம்பமாவதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் மணலினை பதிவாளரின் அனுமதியுடன் பார்வையிட முடியும்.

ஏலத்தில் பொருளினைக் கொள்வனவு செய்பவர் உடனடியாக கொடுப்பனவினை பணமாகச் செலுத்தி ஏலப் பொருளினை அப்புறப்படுத்த வேண்டும். கொடுப்பனவுகள் பணமாக மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதுடன் காசோலைகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)



யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு 2020, 2021 கடந்த 8 ஆம் திகதி பாடசாலையின் விசாலாட்சி மண்டபத்தில் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

# பாதுகாப்பு, ஊட்டச்சத்துக்கான மாகாண தலைவராக வடக்கு ஆளுநர்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக்கான வடக்கு மாகாண ஒருங்கிணைந்த பொறிமுறையின் (PCMFSN) தலைவராக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான கடிதத்தை ஜனாதிபதியின் செயலாளர் உத்தியோபூர்வமாக கையெழுத்திட்டு வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளார். (4-104)



உரும்பிராய் மகப்பேற்று சிகிச்சை நிலையத்தில் மார்பக புற்று நோய்க்கான விழிப்புணர்வு செயற்றிட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

# பொது இடங்களை அசுத்தம் செய்வோருக்கு கடும் நடவடிக்கை

## யாழ். மாநகர சபை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் பொது இடங்களில் குப்பை கொட்டுதல், வெற்றிலை துப்புதல், மலசலம் கழித்தல் ஆகியவற்றுக்கு தண்டப் பணம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் இனிவரும் காலங்களில் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு குற்றம் இழைத்தவர்களுக்கு உடனடியாகவே தண்டம் அறவிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என யாழ். மாநகர சபை உறுப்பினரும் சுகாதார குழு தலைவருமான வ.பார்த்தீபன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கழிவுகளை உரிய முறையில் அகற்றும் செயற்பாடுகள் உள்ள போதிலும் பலரும் கழிவுகளை உரிய இடங்களில் போடாது வீதிகள், பொது இடங்களில் வீசி விட்டு செல்கின்றனர். அதனால் சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுகின்றன.

வீடு வீடாக தூய்மை பணியாளர்கள் வரும் போது, குடியிருப்பாளர் குப்பைகளை தரம் பிரித்து அவர்களிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் வரவில்லை எனில் மாநகர சபைக்கோ அல்லது சம்பந்தப் பட்ட அதிகாரிகளுக்கோ முறையிடலாம். அதனை விடுத்து வீதிகளில் கழிவுகளை வீசி செல்வதனால் சூழலுக்கு பாதிப்பு ஏற்படுகின்றன. கடந்த காலங்களில் இருந்த தண்டப் பணத்தினை தற்போது சபையின் அனுமதியுடன் திருத்தி அமைத்துள்ளோம். பொது இடங்களில் குப்பை கொட்டுதலுக்கு 5 ஆயிரம் ரூபாயும் பொது இடத்தில் வெற்றிலை துப்பினால் 2 ஆயிரம் ரூபாயும் பொது இடத்தில் மலசலம் கழித்தால் 5 ஆயிரம் ரூபாயும் தண்டம் அறவிடப்படும் எனத் தெரிவித்தார். (4-6-33)

# பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயம் திறப்பு



(சாவகச்சேரி)

பனை அபிவிருத்திச் சபையின் தலைமைக் காரியாலயம் நேற்று வியாழக்கிழமை காலை கைதடியில் அமைந்துள்ள பனை ஆராய்ச்சி நிறுவன வளாகத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் கிரிஷாந்த பத்திராஜா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் ரமேஷ் பத்திரன கலந்து கொண்டு கட்டடத்தினை திறந்து வைத்தார். (4-30-33-104-60)


# மரண அறிவித்தல்

## அமரர். சின்னத்தம்பி கார்த்திகேசு



யாழ்.நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் யோகபுரம்,கனடா Markham ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்கள் 12.10.2022 புதன்கிழமை அன்று இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி சின்னதங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகசபை ஐயாத்தப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் கமலாம்பிகை அவர்களின் அன்புக் கணவரும் புனிதவதி , புட்கலாதேவி, வசந்தாதேவி , யோகநாதன், கதிர்காமநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் புண்ணியசிங்கம் (ஆனந்தம்) காலஞ்சென்ற பேரின்பநாயகம், அருள்மதி, விஜயானந்தி ஆகியோரின் அன்பு மாமாவும் உஷானந்தி, சிவகௌரி , பிரதீப், பிராசாந் ,திவ்வியா, பிரியங்கா,கார்த்திகா,கீர்த்தனா, Aaron , அஞ்சனா , சில்வியா,சிவானி , சாமினி, ஜனகன்,பிரியா, பாகுலன்,கிருஷாந், Brain ஆகியோரின் அன்புப் பேரனும் அயன், சியன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 14.10.2022 இன்று வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் ,உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

(சி-5085) தகவல் :குடும்பத்தினர்


# விழிப்புலனற்றோர் சங்கத்தின் வெள்ளைப்பிரம்பு தின நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தினால் சர்வதேச வெள்ளைப்பிரம்பு தின விழா-2022 நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இல.28, 1 ம் ஒழுங்கை, கோவில் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள பிரதான அலுவலகத்தில் சங்கத் தலைவர் எஸ்.வை.சுதாகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. அன்றைய தினம் காலை 8 மணிக்கு யாழ். பிரதான பேருந்து தரிப்பிடத்தில் இருந்து விழிப்புணர்வு பேரணி இடம்பெறவுள்ளது. (4)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்.

சின்னத்தம்பி கார்த்திகேசு



நெடுந்தீவை பிறப்பிடமாகவும் யோகபுரம் மற்றும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கார்த்திகேசு அவர்கள் காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும் இலட்சுமணன் இளங்கோவன் குடும்பம்–புங்குடுதீவு

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! சி-5084


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## முத்தரப்பு இருபது-20

## பங்களாதேஷிற்கு எதிரான தொடரில்

# பாகிஸ்தான் வெற்றி



முத்தரப்பு இருபது-20 தொடரின் ஆறாவது லீக் போட்டியில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில் பாகிஸ்தான் அணியும் பங்களாதேஷ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு 173 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, லிடொன் தாஸ் 69 ஓட்டங்களையும் சகிப் அல்ஹசன் 68 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 174 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய பாகிஸ்தான் அணி, 19.5 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.


இதனால், பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, மொஹமட் ரிஸ்வான் 69 ஓட்டங்களையும் பாபர் அசாம் 55 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக 56 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 69 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட மொஹமட் ரிஸ்வான் தெரிவு செய்யப்பட்டார்.

இன்று கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் நடைபெறும் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணியும் நியூஸிலாந்து அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன. (4)

## தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை கைப்பற்றியது இந்தியா



தென்னாபிரிக்க அணிக்கு எதிரான 3 ஆவது ஒருநாள் கிரிக்கெட் போட்டியை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்ற இந்தியா தொடரையும் கைப்பற்றியது.

டெல்லியில் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 27.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 99 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

இதனையடுத்து, 100 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு களமிறங்கிய இந்திய அணி 19.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 105 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதனால் இந்திய அணி 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியுடன் 3 போட்டிகள் கொண்ட சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரை 2- 1 என்ற ஆட்டக் கணக்கில் இந்தியா கைப் பற்றியது.

அத்துடன் ஐ.சி.சி கிரிக்கெட் உலகக் கிண்ண சுப்பர் லீக் தொடருக்கான 4 புள்ளி களை இந்தியா பெற்றது டன் தென்னாபிரிக்காவுக்கு 2 புள்ளிகள் கிடைத்துள்ள மையும் குறிப்பிடத்தக்கது. (4)




யானுஷா




நதீஸ்




தினேஷ்




தனுசன்




விநுஜா




சுரேஜிதா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரிய மனித பேரழிவை நோக்கி நகரும் இலங்கை

## ஐ.நா கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

**இலங்கை மிகப்பெரிய மனித பேரழிவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக ஐ.நா மனிதாபிமான விவகார ஒருங்கிணைப்பு குழுவான "ரிலீப்வெப்" தெரிவித்துள்ளது.**

அந்த அமைப்பு தனது அறிக்கையில் கூறியிருப்பதாவது,

இலங்கையின் அந்நியச் செலாவணி கையிருப்பு தீர்ந்துவிட்டதால், மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வாங்க முடியவில்லை. 3 ஆயிரத்து 500 படுக்கைகள் கொண்ட இலங்கை தேசிய மருத்துவமனையில், 60 அத்தியாவசிய மருந்துகள் மட்டுமே உள்ளன.

மயக்க மருந்து விநியோகம் குறைவாக உள்ளது. அதனால், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை உட்பட முக்கியமான பொது அறுவை சிகிச்சைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

புற்றுநோயாளிகள், நீரிழிவு நோயாளிகள் ஆகியோருக்கும் மருந்துகள் கிடைக்கவில்லை. பண்டேஜுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கிராம்புற மருத்துவமனைகள் மூடப்பட்டு விட்டன. அவர்களை நகர மருத்துவமனைகளுக்கு அனுப்புவதால், அங்கு கூட்ட நெரிசல் நிலவுகிறது.

டீசல் தட்டுப்பாட்டால், மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. மருத்துவர்கள், வெளிநாடுகளுக்கு சென்றுவிட்டனர். மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் அனுமதி குறைந்துவிட்டது.

மனித பேரழிவை நோக்கி செல்லும் இலங்கையில், இன்னும் 6 மாதங்களில் நிறைய உயிரிழப்புகள் ஏற்படலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (நி)

# எச்சரிக்கையின் பின்னர் சனத் நிஷாந்த விடுவிப்பு

(கொழும்பு)

நீதிமன்றில் முன்னிலையான இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் கடும் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டுள்ளார்.

நிஷங்க பந்துல கருணாரத்ன மற்றும் ஆர். குணசிங்க ஆகியோர் அடங்கிய மேன் முறையீட்டு நீதிமன்றில் தனது சட்டத்தரணிகள் ஊடாக முன்னிலையாகிய இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவை தினமும் நீதிமன்றில் முன்னிலையாக வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

நீதிமன்றத்தில் முன்னிலையாகத் தவறியதற்காக உடனடியாகக் கைது செய்யுமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார். (4)

# மைத்திரி, தயாசிறிக்கு நீதிமன்று அழைப்பாணை

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் தாம் வகிக்கும் பதவிகளைப் பறிக்க எடுக்கப்பட்ட தீர்மானத்தை இரத்துச் செய்யக் கோரி அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 19 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவினால் முன்வைக்கப்பட்ட மனுவை பரிசீலித்த நீதிமன்றம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

மேலும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன மற்றும் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (4)

# கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுடன் எரிக் சொல்ஹெய்ம் சந்திப்பு

(கொழும்பு)

நோர்வேயின் முன்னாள் அமைச்சரும் இலங்கைக்கான முன்னாள் சமாதான தூதுவருமான எரிக் சொல்ஹெய்மிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர்களுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.



இதற்கமைய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் ஆகியோரை சந்தித்து பேசியுள்ளதாக எரிக் சொல்ஹெய்ம் தனது டுவிட்டர் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் இதன்போது கவனம் செலுத்தப்பட்டிருந்ததாக குறிப்பிடப்படுகின்றது.

அத்துடன், பொருளாதார மீட்சி, பசுமையான அபிவிருத்திகள் மற்றும் அரசியல் சீர்திருத்தம் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (4)

# இராசிபலன்

14.10.2022
புரட்டாதி 27, வெள்ளிக்கிழமை
பஞ்சமி பின்னிரவு 5.33 மணிவரை

ரோகிணி முன்னிரவு 10.22 மணிவரை
சுபநேரம்- 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் -10.32-12.02 மணிவரை

சந்திராஷ்டமம்- சுவாதி,விசாகம்

வளவன்


மேஷம்

சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும்.


ரிஷபம்

பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்,போசன சுகமுண்டு.


மிதுனம்

குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது,தொழிலில் கூடுதல் பொறுப்புக்கள் வந்து சேரலாம்,சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள்.


கடகம்

அதிஷ்ட வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், முன்னேற்றத்திற்கு வழி காட்டியவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்,சிறப்பான நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்,வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.


கன்னி

வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், தொழிலில் இருந்த எதிர்ப்புகள் விலகும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


துலாம்

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், வீட்டுக் கொடுத்துச் செல்வதால் வெற்றி கிடைக்கும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்,சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.


விருச்சிகம்

பாடுபட்டதற்கேற்ப பலன்கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பொது வாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


தனுசு

சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம்,தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.


மகரம்

உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


கும்பம்

மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும், உறவினர் வழியில் ஆதரவு கிடைக்கும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மீனம்

இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், உறவினர் நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

சோம்பேறிகளுக்கு எல்லா நாட்களும் விடுமுறையே.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| திருக்குறள் | திருவள்ளுவர் |
| மகாபாரதம் | வேதவியாசர் |
| ஆசியஜோதி | தேசிய விநாயகம்பிள்ளை |
| பெரிய புராணம் | சேக்கிழார் |
| சீறாப்புராணம் | உமறுப்புலவர் |
| கந்தபுராணம் | கச்சியப்ப சிவாச்சாரியார் |
| நளவெண்பா | புகழேந்திப்புலவர் |
| சிலப்பதிகாரம் | இளங்கோவடிகள் |
| மணிமேகலை | சீத்தலைச்சாத்தனார் |
| யாழ்நூல் | விபுலானந்தர் |
| கீதாஞ்சலி | இரவீந்திரநாத்தாகூர் |
| சூளாமணி | தோலாமொழித்தேவர் |
| மேகதூதர் | காளிதாசர் |
| சீவகசிந்தாமணி | திருத்தக்கத்தேவர் |
| அபிராமி அந்தாதி | அபிராமிப்பட்டர் |
| திருப்புகழ் | அருணகிரிநாதர் |
| திருமுருகாற்றுப்படை | நக்கீரர் |
| நைடதம் | அதி வீரராம பாண்டியர் |
| கம்பராமாயணம் | கம்பர் |
| அரிச்சந்திரபுராணம் | வீரகவிராசர் |
| பொன்னியின் செல்வன் | கல்கி |

## எல்லாம் சரிதான் பசிக்கிறதே

ஒரு பூனை சேவலைப் பிடித்துக் கொண்டது. அதை கொன்று தின்ன விரும்பிய பூனை தனது செயலுக்கு நியாயம் கற்பிக்க விரும்பிஏ! சேவலே நீ இரவுகளில் கூவி மனிதர்களின் தூக்கத்தைச் கெடுக்கிறாய். ஆகவே உன்னைத் தண்டிக்கப் போகிறேன் என்றது.

சேவலோ நான் அவ்வாறு கூவுவதால் தான் மனிதர்கள் நேரத்திற்கு எழுந்து தங்களது வேலைகளை நேரத்துடன் செய்து முடிகிறார்கள் என்று பதில் சொன்னது.

அதெல்லாம் சரிதான் ஆனால் நான் இரையின்றி வாழ முடியாதே என்று கூறி அதனைக் கொன்று தின்றது.

## நூலகம்

நூறாயிரம் நல் விடயங்கள்
நூல்களாக உருப்பெற்றுள்ள
அவையோர்க்கு எல்லாம்
அறிவூட்டும் களஞ்சியமாம்
பண்டிதர்களின் அறிவு நிறைப்
பனுவல்கள் தம்மகத்தே பணிப்ப
யாழ் நகரிலே பெரும் புகழோடு
யாழிசை போல் விளங்கும் எம் நூலகமே.

ஆருத்ரா ஜெயசீலன் - தரம் 10
வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை

# சிலப்பதிகாரம்

## முன்வினைப் பயன்கள்




ஆனால், அரசாங்க அதிகாரிகள் அதைப் புதையல்என்று எண்ணி விட்டார்கள் அந்தச் சிறுவனின் தந்தை அரசாங்கத்துக்குச் சொந்தமானதை தனதாக்கிக்கொள்ள நினைத்தார் என்று சொல்லி அவரைக் கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

இந்த அநீதியைக் கண்டு கொற்றவையின் கோயில் வாசற் கதவுகள் மூடிக் கொண்டன. தவறு நடந்திருப்பதைப் புரிந்து கொண்டான் பாண்டியன்.

உடனடியாக அவன் இது குறித்து மேலதிக விபரங்களைத் தெரிந்து கொள்வதற்காக அறவோர்களை நாடெங்கும் அனுப்பி விசாரித்தான் உண்மையை அறிந்தான். நிரபராதியான அந்தச் சிறுவனின் தந்தையின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டான். சிறந்த விளை நிலங்கள் கொண்ட இரண்டு ஊர்களைத் தானமாக வழங்கினான்.

'இது மாதிரியான நற் செயல்களைச் செய்தவர்கள் எந்தத் தீங்கிற்கும் ஆளாக நேரிடுவதில்லை. ஆனாலும் இப்பேர்ப்பட்ட பாண்டியனின் மதுரை நகரம் இந்த நாளில் இந்த நேரத்தில் எரியூட்டப்பட்டது. காரணம் அவனுடைய முன்னோர்கள் பெற்ற ஒரு சாபம் தான். அதேபோல், கோவலன் கொல்லப்பட வேண்டும் அதுவும் ஒரு சாபம்.

கோவலனைக் கொல்லும் கருவியாக விதி பாண்டியனைப் பயன்படுத்தியது. அதுவே மதுரை எரிக்கப்படக் காரணமும் ஆனது. இருவருடைய முன்வினைப் பயன்களும் நிறைவேறி விட்டன.

கண்ணகி இப்போது சமாதானத்துக்கு வந்திருந்தாள். ஆனாலும் நகரின் மையத்தில் தான் செய்திருந்த சபதத்தை அவள் இன்னும் மறக்கவில்லை.

### கண்ணகி சபதம் நிறைவேறியது

கண்ணகியின் மனதில் ஓடிய எண்ணங்களை மதுராபதியால் படிக்க முடிந்தது.

உன் சபதம் நிறைவேற சங்கமனின் மனைவி போல நீயும் பதினான்கு நாட்கள் பொறுத்திருக்க வேண்டும் என்றான் மதுராபதி. பதினான்கு நாட்களா? மதுராபதியை ஆச்சரியத்துடன் நிமிர்ந்து பார்த்தாள் கண்ணகி.

ஆம் சங்கமனின் மனைவி பதினான்கு நாட்கள் பொறுத்திருந்து தான் தன் கணவனுடன் இணைந்தாள். நீயும் அதேபோல் கோவலனை மீண்டும் சந்திப்பாய் அவனோடு இணைவாய்!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 99

நேற்றிரவு ரஷ்யப் படைகளின் தாக்குதல் மூர்க்கத்தனமாக இருந்தது. இன்று மீண்டும் குடியிருப்புப் பகுதிகளில் தாக்குதல் நடத்துகின்றனர். பள்ளிக்கூடங்கள், அம்புலன்ஸ்கள் மீது கூட தாக்குதல் நடத்துகின்றனர். வாஸில்கிவ், கீவ், செரிஞ்சிவ், சுமி, கார்கிவ் ஆகிய நகரங்களில் மக்கள் மோசமான ஆபத்தை எதிர்கொண்டுள்ளனர். இரண்டாம் உலகப் போரின் போது எங்கள் நாடு எதிர்கொண்டிருந்த நிலை தான் இப்போதும் நிலவுகிறது" என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வேதனையைப் பதிவு செய்துள்ளார்.

**"அமெரிக்கா தான் எல்லா பிரச்சினைக்கும் காரணம்": உக்ரைன் விவகாரத்தில் வட கொரியா கருத்து**

வட கொரியாவின் வெளியுறவு அமைச்சர் ரி ஜி சாங்கின் இணையதளத்தில் அமெரிக்காவை குற்றஞ்சாட்டி ஓர் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அந்த அறிக்கையின் விவரம் வருமாறு:

ரஷ்யா தனது பாதுகாப்பு குறித்து தொடர்ந்து கவலை தெரிவித்தது. உக்ரைன் நேட்டோவில் இணையக்கூடாது என்ற ரஷ்யாவின் கோரிக்கை நியாயமானதே. ரஷ்யாவின் பாதுகாப்புக்காக முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு மேற்கத்திய நாடுகள் செவி சாய்க்கவில்லை. அமெரிக்கா நேட்டோ வாயிலாக மறைமுகமாக தனது இராணுவ பராக்கிரமத்தை நிறுவ முயன்றது. அமெரிக்காவின் இந்த ஆணவப் போக்கும், தேவையற்ற மத்தியஸ்தமும் தான் உக்ரைன் பிரச்சினைக்கு வித்திட்டது.

அமெரிக்கா இரட்டைக் கொள்கையுடன் செயற்பட்டு உக்ரைன் போன்ற சிறிய நாடுகளின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டு அமைதி, ஸ்திரத்தன்மை என்ற போர்வையில் அவற்றை தவறாக வழிநடத்துகிறது. ஆனால், இன்று தாக்குதல் என்ற நிலை வந்தவுடன் அந்த உக்ரைனுக்கு இராணுவ உதவி ஏதும் வழங்காமல் கைவிட்டுவிட்டது.

உலகளவில் அமெரிக்க ஆதிக்க காலம் கடந்துவிட்டது. உக்ரைன் மீது தாக்குதல் நடைபெற அமெரிக்கா தான் காரணம். இதிலிருந்து சிறிய நாடுகள் ஒன்றைத் தெரிந்து கொள்ளலாம். உங்களிடம் பலம் இல்லாவிட்டால் நீங்கள் வருந்த வேண்டி தடைகளை விதித்துள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுப்பதை எதிர்த்து ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது.

உக்ரைன் மீது ரஷ்யா நடத்தி


ஐ.நா பொதுச் சபை சிறப்புக் கூட்டம்



யிருக்கும் என்பதே அது. அதுதான் இந்தத் தாக்குதலின் முக்கியக் கருத்தும் கூட. இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ரஷ்ய தாக்குதலுக்கு சீனா, பாகிஸ்தான் பகிரங்கமாக ஆதரவு தெரிவித்துள்ளன. அந்த வரிசையில் தற்போது வட கொரியாவும் இணைந்துள்ளது. வட கொரியா ரஷ்யாவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், அமெரிக்க ஆதரவு நாடான தென் கொரியா ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் வரும் போர் தீவிரமடைந்து வரும் நிலையில் அதை எதிர்த்து ஐ.நா பாதுகாப்பு சபையில் அமெரிக்கா, அல்பேனியா ஆகிய நாடுகள் வரைவு தீர்மானம் கொண்டு வந்தன. இதற்கு போலந்து, இத்தாலி, ஜேர்மனி, நியூசிலாந்து உள்ளிட்ட நாடுகள் ஆதரவு அளித்திருந்தன. போர் தொடுக்கும் ரஷ்யாவின் செயலை கண்டிப்பதுடன் அந்நாட்டு படைகள் நிபந்தனைகள் ஏதுமின்றி உக்ரைனிலிருந்து வெளியேற வேண்டும் என வரைவு தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. (தொடரும்)

# ரஷ்யாவுக்கு எதிரான தீர்மானம் ஐ.நா வில் நிறைவேற்றம்



(ஜெனிவா)

**உக்ரைனின் நான்கு பிராந்தியங்களை ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டதற்கு எதிராக ஐ.நா சபையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

இந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக 143 நாடுகளும் எதிராக 5 நாடுகளும் வாக்களித்துள்ளன. மேலும் இலங்கை உட்பட 35 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்துள்ளன.

ரஷ்யப் படையெடுப்பிற்குப் பிறகு ரஷ்யாவிற்கு எதிராக பதிவான அதிக எண்ணிக்கையிலான வாக்குகள் இது வாகும்.

உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி மாதம் இராணுவ நடவடிக்கையை தொடங்கிய ரஷ்யா, அண்மையில் லுஹான்ஸ்க், டோனெட்ஸ்க், கெர்சன், சபோரிஸியா ஆகிய 4 பிராந்தியங்களைத் தன்னுடன் இணைத்து கொண்டது.

இதற்கு அமெரிக்கா, கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் கடும் எதிர்ப்பை வெளியிட்டன.

முன்னதாக இந்தத் தீர்மானத்தின் மீது இரகசிய வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையில் ரஷ்யா முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

# நேட்டோ நாடுகள் மீது கை வைத்தால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும்

## நேட்டோ அமைப்பு கடும் எச்சரிக்கை

(மொஸ்கோ)

நேட்டோ கூட்டு நாடுகளின் மீது தாக்குதல் மேற்கொண்டால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என ரஷ்யாவுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக ரஷ்யா வான்தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளது. இதற்கு நேட்டோ அமைப்பு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

போரில் தோல்வியைத் தழுவும் அச்சத்தால் ரஷ்யா அணு ஆயுத இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல்களைத் தொடுத்து வருவதாக நேட்டோ நாடுகளின் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

தங்கள் கூட்டு நாடுகளின் முக்கிய உட்கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தினால் கடும் எதிர்ப்பை சந்திக்க நேரிடும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி)

# பாகிஸ்தானுக்கு உதவிக்கரம் நீட்டும் இந்தியா

(டில்லி)

கடந்த மாதம் பாகிஸ்தானில் ஏற்பட்ட பாரிய வெள்ளப்பெருக்குக் காரணமாக 1600 க்கும் மேற்பட்ட மக்கள் இறக்க நேரிட்டது.

இதன் காரணமாக நாட்டில் வெள்ளம் தேங்கியதால் நுளம்புகள் பெருகி பல தொற்று நோய்கள் உருவாகும் அபாயம் அதிகரித்து வருகின்றது.

இதனால் மக்களது நிலை நாளுக்கு நாள் மேலும் மோசமடைந்து வருவதால் பாகிஸ்தானுக்கு உதவுவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

இதனடிப்படையில் தொற்று நோய் அபாயத்துக்கு உள்ளாகியுள்ள பாகிஸ்தான் மக்களுக்கு 6.2 மில்லியன் நுளம்பு வலைகளை வழங்குவதற்கு இந்தியா முன்வந்துள்ளது.

இதனை ஏற்றுக்கொள்ளும் விதமாக நேற்று முன்தினம் பாகிஸ்தான் அரசாங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த ஆண்டு இதுவரை
# 60 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவு
## சுகாதார அமைச்சு தகவல்

**(கொழும்பு)**

**நாடளாவிய ரீதியில் இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் 60 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் வரையில் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

கடந்த வாரத்தில் ஆயிரத்து 152 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அதன்படி, இதுவரை 59 ஆயிரத்து 317 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் தேசிய டெங்கு கட்டுப் பாட்டுப் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது.

கடந்த வருடம் குறித்த காலப்பகுதியில் 19 ஆயிரத்து 912 டெங்கு நோயாளர்களே பதிவாகியுள்ளதாக டெங்கு கட்டுப் பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்வருடம் கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதேவேளை யாழ்ப்பாணம் உட்பட கண்டி, காலி, கேகாலை, புத்தளம், குருநாகல் ஆகிய மாவட்டங்களிலும் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அதிக டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். தற்போது நிலவும் டெங்கு பரவலைக் கருத்திற்கொண்டு 36 பிரிவுகளை அதிக அபாய வலயங்களாக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# மண்ணெண்ணெய்க்கு மீண்டும் கடும் தட்டுப்பாடு

(கொழும்பு)

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் மூடப்பட்டுள்ள நிலையில் மீண்டும் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு கடுமையாக ஏற்பட்டுள்ளதாக எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஒரு நாளைக்கு 450-500 மெற்றிக் தொன் மண்ணெண்ணெய் தேவை. ஆனால் தற்போது ஒரு நாளைக்கு 50 மெற்றிக் தொன் மட்டுமே சந்தைக்கு விடப்படுகிறது.

இதனால் மீண்டும் மண்ணெண்ணெய்க்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# மின்னல் தாக்கி திருமலையில் ஒருவர் பலி

(திருமலை)

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கங்குவேலி பகுதியில் உள்ள வயல்வெளியில் வைத்து மின்னல் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் மூதூர் - கங்குவேலி பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கோபாலசாமி சந்திரகுமார் (வயது 45) என பொலிஸார் தெரிவித்தனர் .

குறித்த நபர் வயல்வெளியில் வயல் வேலை செய்து கொண்டிருந்த போதே இவ் அனர்த்தம் இடம்பெற்றிருப்பதாக ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த நபரின் சடலம் தற்போது மூதூர் தள மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி)

# 1 மில்.கிலோ அரிசி துறைமுகங்களில் நீண்டகாலமாக தடுத்து வைப்பு

(கொழும்பு)

பல்வேறு காரணங்களினால் துறைமுகங்களில் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள கொள்கலன்களில் உள்ள 1 மில்லியன் கிலோ அரிசியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று முன்தினம் துறைமுகம் மற்றும் சுங்கப்பிரிவின் அதிகாரிகளுடன் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

காலதாமதக் கட்டணம் செலுத்தப்படாமை காரணமாக 79 கொள்கலன் அரிசித் தொகை விடுவிக்கப்படாமல் காணப்படுவதாகவும் துறைமுகங்களில் நிலவும் கடும் நெரிசலை குறைப்பதற்காக தற்போது சுங்கத் திணைக்களத்தில் உள்ள 950 இற்கும் மேற்பட்ட கொள்கலன் தாமதக் கட்டணமின்றி விடுவிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் துறைமுகங்களில் காணப்படும் கொள்கலன்களில் அரிசியை மட்டுமன்றி கருங்கா, மஞ்சள் போன்ற பொருட்கள் கையிருப்பில் உள்ளதாகவும் அவற்றை முன்னுரிமை பட்டியலின் கீழ் வெளியிடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி)


# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: சூரி 12 செவ் 11 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSc (Hons) Q.S (பிரான்ஸ்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/13017 | பிறப்பு: 1997 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 3<br>கி.பா: சூரி 7 செவ் 10 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: சொந்த வியாபாரம் அல்லது அரசதொழில்<br>தொ.இ: G/13018 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: சூரி 9 செவ் 10 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L (அரசதொழில்)<br>எதிர்பார்ப்பு: அரசதொழில்<br>தொ.இ: B/13020 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 19 ¾ சூரி. செவ் 5 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு அல்லது அரசதொழில்<br>தொ.இ: G/13019 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: சூரி 5 செவ் 4 இல்<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: Q.S (UK) PR இல்லை<br>எதிர்பார்ப்பு: லண்டன் PR உள்ள பெண்<br>தொ.இ: B/13021 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 4<br>கி.பா: 70 ½ சூரி. செவ் 1 இல்<br>உயரம்: 4'9"<br>தகைமை/தொழில்: Diploma Eng,HND<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் தொழில்<br>தொ.இ:G/13024 |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 3<br>கி.பா: சூரி 9 செவ் 8 இல்<br>தகைமை/தொழில்: A/L (சுவிஸ்)<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர் சைவபோசனம்<br>தொ.இ: B/13022 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: சூரி 10 செவ் 4 இல்<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி தபாலதிபர் கணவனை இழந்தவர் 4 வயது பெண் பிள்ளை உண்டு.<br>உயரம்: 5'5"<br>தொ.இ:G/13025 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.**


# வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் மாதகல் ஆதன உரிமைமாற்ற அறிவித்தல்


வட்டாரம் :- 08
ஆதன இல :- 125
வீதி :- மல்லாகம் வீதி
கிராம சேவையாளர் பிரிவு :- J/153
வலி .தென்மேற்கு பிரதேச செயலாளர் பிரிவு,

எமது இடாப்பில் மேற் குறிப்பிடப்பட்ட இலக்கத்தில் அமைந்துள்ள இவ் ஆதனமானது, உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்புக் கோவிற்பற்று பெரியவிளான் இறை: **"திக்கரை"** பரப்பு நில. இலாச்சம் ஒன்றுக்கும் (1) எல்லைகள்,

கிழக்கு : பசுபதி தேவன் மஞ்சுளாவின் ஆதனம்;
வடக்கு : ஒழுங்கை
மேற்கு : பொனிப்பாஸ் அருளானந்தத்தின் ஆதனம்;
தெற்கு : றோட்டு
இவ்வெல்லைப்படி இதடங்கலும்

குறித்த இவ் ஆதனமானது உறுதி இலக்கங்கள் 12005/30.11.2011 (திரு.து.பாக்கியநாதன்), 6335/24.06.2017 (திரு.த.அன்ரன் பாலசிங்கம்), அவர்கள் முகதாவில் எழுதப்பட்ட சீதன உறுதிப்படி பொன்னன் விக்கினேஸ்வரன் பெண் சாந்தினிமேரி அவர்களால் குறித்த அருளானந்தம் ஜெயந்தன் பெண் மேரி லயன்ஷினி ஆகியோருக்கு சீதனமாக வந்தடைந்தமையினை உறுதிப்படுத்தி எமது பண்டத்தரிப்புக் கிராம உப அலுவலக (மாதகல்) ஆதனவரிப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. S.பாலேந்திரன் அவர்களால் 14.02.2020 ம் திகதிய 2020/67 ம் இலக்கத்தில் அளந்து தயாரிக்கப்பட்ட நில அளவைப்படத்தில் நிலப்பரப்பு 0 குளி 17.05 கொண்ட லொட் 1 எனச் சுட்டப்பட்டுள்ள ஆதனமாகும். **"திக்கரை"** எனப் பெயர் கொண்ட இவ் ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு யாரும் ஆட்சேபனைகள் ஏதும் தெரிவிக்காதவிடத்து குறித்த ஆதனமானது **அருளானந்தம் ஜெயந்தன் பெண் மேரி லயன்ஷினி** எனும் பெயருக்கு ஆதனப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் எதிர்காலத்தில் ஏற்படவிருக்கும் எவ்வித குறைபாடுகள், பிரச்சினைகள், பிசகு தடைகளிற்கு வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி ஆக மாட்டாது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**திரு.அ.ஜெபநேசன்,**
**தவிசாளர்,**
**வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை,**
**மானிப்பாய்.**




(13111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.

*– திருக்குறள்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தூதுவர் என்போர் நடுநிலை தவறலாமோ!

"தூது" என்ற சொற்பதம் தமிழ் மொழியில் உள்ள உயர் பதங்களில் ஒன்று.

தவிர, தூது என்ற சொற்பதம் தந்த இலக்கியங்கள் ஏராளம்.

கம்பராமாயணத்தில் அனுமன் இராம தூதனாக இலங்கை செல்கிறான்.

கந்தபுராணத்தில் வீரவாகுதேவர் தூது செல்கிறார்.

ஆக, தூது செல்கின்ற ஒரு நடைமுறை சாதாரண மனித வாழ்வு தொடக்கம் மாமன்னர்களின் அரசாட்சிவரை நீண்டு நிலைத்து நிற்கிறது.

இந்தவகையில், இலங்கை அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடந்த தூது முயற்சிகள் பற்றி ஒரு பெரும் இதிகாசத்தையே படைக்க முடியும்.

அதிலும் நோர்வேத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் விசேட தூதுவராகக் கடமையாற்றியமை அனைவரும் அறிந்த விடயம்.

எரிக் சொல்ஹெய்மின் தூது முயற்சி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளை நடத்தத் துணையாயிருந்தது.

முடிவுகள் என்னவாயிற்று என்ற கேள்விகள் இங்கு அவசியமற்றவை.

மாறாக, அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஓர் இணக்கப்பாட்டைக் கொண்டுவருகின்ற எரிக் சொல்ஹெய்மின் தூது இலங்கை வரலாற்றில் மறைக்கப்பட முடியாத இடம்.

அதேநேரம் இலங்கை தொடர்பில் எரிக் சொல்ஹெய்மின் கருத்துக்கள் சிங்கள - தமிழ் மக்கள் மத்தியில் மிகுந்த கருசனை கொண்டுள்ளன.

அதாவது எரிக் சொல்ஹெய்மின் முயற்சியில் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

அதேநேரம் இன்றுவரை அவரை ஒரு நடுநிலையாளராகவே தமிழ் மக்கள் நம்புகின்றனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டுள்ளார் என்ற செய்தி தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும் திகைப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

அவரின் நியமனம் எந்தவகையில் அமைந்தாலும் தூதுவர் என்போர் என்றும் எப்போதும் நடுநிலையாளராக இருக்க வேண்டும் என்பதே அறம்சார் நியதி.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக நியமனம் பெற்ற அந்தக் கணத்தில் இருந்து எரிக் சொல்ஹெய்ம் தனது நடுநிலைத் தன்மையை இழந்துள்ளதுடன் அவர் மீதான தமிழ் மக்களின் நம்பிக்கையும் சிதறடிக்கப்பட்டுள்ளது.

ஆம், நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஒரு நல்ல தூதுவர் என்று இதுகாறும் நம்பியிருந்த தமிழ் மக்கள் தற்போது தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் எங்களை ஏமாற்றியுள்ளார் என்று நினைக்கின்ற அளவில் அவரின் செயல் அமைந்துள்ளது.

உண்மை. ஜனாதிப்தி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசகராக பொறுப்பேற்ற அந்தக் கணப்பொழுதில் இருந்து இலங்கைப் பிரச்சினை தொடர்பில் கருத்துக் கூறுகின்ற தகைமையை தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் இழந்துள்ளார்.

அவர் இனி இலங்கை அரசாங்கத்தின் சார்புடைய ஒருவராகத் தன்னை அடையாளப் படுத்திவிட்டார்.

### பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்காது

# போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களை பாதுகாக்கிறது அரசாங்கம்

## உறவுகள் காட்டம்

(மன்னார்)

ஆட்சிக்கு வருகின்ற அனைத்து அரசாங்கமும் பாதிக்கப்பட்ட மக்களை காப்பாற்றுவதற்காகவும் நீதியை பெற்றுத் தருவதற்காகவும் செயற்படவில்லை. அவர்கள் தமது அரசினையும் தமது மக்களையும் இராணுவத்தையும் போர்க் குற்றத்தை மேற்கொண்டவர்களையுமே பாதுகாத்து வருகின்றனர் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு 2 இலட்சம் ரூபாய் பணமும் மரண சான்றிதழ் வழங்க உள்ளதாகவும் தெரிவித்துள் ளார்.ஏற்கனவே ஒரு இலட்சம் ரூபாய் வழங்க உள்ளதாக தெரிவித்தனர்.

தற்போது அதற்கு வட்டியுடன் சேர்த்து 2 இலட்சம் ரூபாய் தருவதாகக் கூறுகின்றார்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக தாய்மார் வீதிகளில் நின்று போராடி வருகின்றனர். கையில் ஒப்படைக்கப்பட்ட, கண்முன்னே பிடித்துச் செல்லப்பட்ட நிலை யில் காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகளைத் தேடி நாங்கள் வீதியில் நின்று போராடி வருகிறோம்.

சுமார் 2 ஆயிரம் நாட்களையும் தாண்டியுள்ளது எமது போராட்டம். எமக்கு நீதி வேண்டும். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது? என்றே நாங்கள் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். நாங்கள் அரசிடம் நிதி கேட்கவில்லை. இவர்கள் வழங்கவுள்ள 2 இலட்சத்தையும் நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் தொலைத்தது ஆடு, மாடுகளை இல்லை. எமது பிள்ளைகளையே என மேலும் தெரிவித்தார். (4-285)

## வடக்கில் பனைசார் உற்பத்திகளை வலுப்படுத்த விசேட செயற்திட்டம்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

வடமாகாணத்தில் பனைசார்ந்த உற்பத்தியாளர்களின் ஜீவனோபாயத்தினை மேலும் வலுப்படுத்த விசேட செயற்திட்டத்தினை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார். யாழ்ப்பாண பனை அபிவிருத்தி சபை தலைமை அலுவலக கட்டடத் தொகுதி திறப்பு விழாவில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையில் குறிப்பாக வட மாகாணத்தில் தென்னை, பனை உற்பத்தி சார்ந்த உற்பத்தியாளர்கள் பாரிய வீழ்ச்சியினை கண்டுள்ளனர். குறிப்பாக கொரோனாத்தொற்று நிலைமை காரணமாக அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் எற்றுமதிக்கான தர விலைநிர்ணயம் கேள்விக்குறியாக காணப்பட்டாலும் அது தொடர்பான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

நாட்டில் எற்பட்டுள்ள பொருளாதார வீழ்ச்சி அன்னிய செலாவணியின் வருமானம் குறைவாக இருந்தமை இதற்கு காரணமாக காணப்படுகின்றது. அந்தவகையில் பாதிக்கப்பட்ட உற்பத்தியாளர்களுக்கு தகுந்த வருவாயினைப் பெற்றுக் கொடுத்து அதற்காக சந்தைப்படுத்தலுக்கான எற்றுமதியினை எற்படுத்தி ஜீவனோபாயத்தினை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ம-7)

## மன்னாரில் பெரும்போகம் தொடர்பில் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் 2022 - 2023 ஆம் ஆண்டிற்கான பெரும் போக பயிர்ச்செய்கை தொடர்பான விசேட கூட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் உயிலங்குளத்தில் அமைந்துள்ள கட்டுக்கரை குளத்திட்ட விவசாயக் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் முதலாவது நீர் விநியோகம் இம்மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் இறுதி திகதியாக எதிர் வரும் 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது கால்நடை பராமரிப்பு தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. அதன் அடிப்படையில் கால்நடைகளை இம்முறை தேத்தாவடி கட்டுக்கரையின் மேல் பகுதி, புல்லறுத்தான், கண்டல்-மேய்ச்சல் தரை போன்ற இடங்களில் பட்டி அடைத்து பராமரிக்கும்படி கால்நடை பண்ணையாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் விதை நெல், உரமானியம், விவசாயிகளுக்கு காப்புறுதிகள், விவசாயிகள் எதிர்கொள்ளும் கால்நடைகளின் தாக்கம் போன்ற பல விடயங்கள் தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டன. (4-285)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைக[illegible] கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** கிராஞ்சி, சிவ்புரம், பாலாவி, பொன்னாவெளி, வலைப்பாடு, வேராவில் முகாம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

## கொக்குவிலில் வாள்வெட்டு; 24 வயது இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியில் முச்சக்கரவண்டி சாரதி மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்ட குழுவைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொக்குவில் - வராகி அம்மன் கோவில் பகுதியை சேர்ந்த 24 வயதான இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

கைது செய்யப்பட்ட இளைஞரை யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முற்பகல் ஆஜர்படுத்திய போது, எதிர்வரும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய குழுவை சேர்ந்த மேலும் 5 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். எனினும், குறித்த சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

வாள்வெட்டுத் தாக்குதலில் பலத்த காயமடைந்த முச்சக்கரவண்டி சாரதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

கொக்குவில் பகுதியில் கடந்த 5 ஆம் திகதி இந்த வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் குற்றப்புலனாய்வு பிரிவினர் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லூர் பிரதேச சபை, கொக்குவில் 2023ம் ஆண்டிற்கான கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பவற்றை 01.01.2023ம் திகதி தொடக்கம் 31.12.2023ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கான கேள்விகள் கோரப்பட்டுள்ளன.

| | |
|---|---|
| கேள்விப் பத்திரம் வழங்கும் காலம் | : 17.10.2022 - 08.11.2022 செவ்வாய் பி.ப 2.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி | : 09.11.2022 புதன்கிழமை மு.ப 10.00 மணி வரை |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி | : 09.11.2022 புதன்கிழமை மு.ப 11.00மணிக்கு |
| கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் | : கலந்துரையாடல் மண்டபம், தலைமை அலுவலகம், நல்லூர் பிரதேச சபை. |

1. கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுட்பட இரு பிரதிகளை தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, 14/5.கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில் என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். மூன்றாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும்.
2. அட்டவணையில் உள்ளவாறு மீளளிக்கப்படாத படிவக்கட்டணம் மற்றும் மீளளிக்கப்படக்கூடிய வைப்புப்பணம் என்பவற்றை செலுத்தி கேள்விப்பத்திரங்களை பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்களை பெறுபவர்கள் தமது தேசிய அடையாள அட்டையையும் கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்விப்படிவக்கட்டணம், கேள்வித் தொகை, மாத வாடகை என்பவற்றுக்கு காலத்திற்குக் காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரியும் செலுத்தப்பட வேண்டும்.
4. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலிச்சந்தை, கொக்குவில் சந்தை என்பவற்றுக்குரிய விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவதொரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே ரூபா 1,500,000.00 இற்கும் ரூபா 200,000.00 இற்கும் குறையாது வைப்பில் உள்ளமைக்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. உள்ளூராட்சி மன்றங்களினால் "தவறுநராக" கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. எனினும் படிவம் வழங்கப்பட்ட பின் அறியும் பட்சத்தில் அவரின் கேள்வி நிராகரிக்கப்படும்.
6. மரக்கறிச் சந்தைக்கான கேள்வியில் சித்தியடையும் கேள்விக்காரர் உள்ளூராட்சி ஆணையாளரின் 03/2015 இலக்கமும் 09.11.2015 திகதியும் உடைய சுற்றுநிருபத்திற்கு அமைவாக இணங்குதல் வேண்டும்.
7. மரக்கறிச் சந்தையை குத்தகைக்கு எடுப்பவர்கள் உற்பத்தியாளர்கள் கொண்டுவரும் பொருட்களின் விற்பனை விலையில் 4% இற்கு மேல் வரி அறவிடக்கூடாது. என்பதுடன், விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களிடமிருந்த தரகுப் பணம் எதுவும் அறவிடப்படலாகாது.
8. சந்தைகளை நடாத்துபவர்கள் துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களை கட்டாயம் நடாத்துதல் வேண்டும். அவ்வாறு நடாத்துவதற்கு தவறின் அதனை காரணமாக குறிப்பிட்டு ஒப்பந்தமானது இரத்துச் செய்யப்படலாம்.
9. இறைச்சிக்காக வெட்டப்படும் கால்நடைகள் கொக்குவில் கொல்களத்தில் வெட்டப்படுதல் வேண்டும். இறைச்சிக்காக மறி ஆடுகள், பசு மற்றும் கன்றுகள் அறுக்கப்படுவது அனுமதிக்கப்படமாட்டாது. இறைச்சிக்காக கொள்வனவு செய்யப்படும் கால்நடைகளுக்கு அப்பகுதி கால்நடை வைத்திய அதிகாரியின் நோய்த்தொற்று இல்லை என்ற சுகாதாரச் சான்றிதழ் பெறப்பட்டிருக்க வேண்டும். மேலும் சுகாதார வைத்திய அதிகாரியினால் கால்நடைகளுக்கான நோய்த்தாக்கம் தொடர்பாக பிரகடனப்படுத்தப்படும் பொழுது கொல்கள செயற்பாடுகள் நிறுத்தப்படும். அத்துடன் சபையால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.
10. இறைச்சிக் கடைகளுக்கான கேள்வியில் சித்திபெறும் கேள்விதாரர் சுகாதார வைத்திய அதிகாரியால் அறிவிக்கப்படும் சுகாதார மேம்பாட்டு விடயங்களைக் கருத்திற்கொள்ளத் தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தத்தினை இரத்துச் செய்வதற்கு தவிசாளருக்கு அதிகாரம் உண்டு.
11. அரசாங்கத்தினால் மாடு இறைச்சிக்காக வெட்டுவது தடை செய்யப்படும் பட்சத்தில் சபையினால் கேள்விதாரருடன் செய்யப்பட்ட குத்தகை உடன்படிக்கை இரத்துச் செய்யப்படும்.
12. திருநெல்வேலிச் சந்தையில் விசேட பண்டிகை நாட்களில் நடைபாதை மற்றும் வீதியோர வியாபார நடவடிக்கைகள் அனுமதிக்கப்பட மாட்டாது என்பதுடன், சபையினால் ஒதுக்கப்பட்ட இடங்களில் மட்டும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வரி அறவிட அனுமதிக்கப்படும்.
13. எந்தவொரு கேள்வியையும் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
14. ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் சபை நிதிக்கு மாற்றப்பட்டு கேள்விகாரரின் பெயர் "தவறுனர்" பட்டியலில் சேர்க்கப்படும்.
15. கேள்வி திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் கேள்விதாரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமூகமளிக்கலாம்.
16. தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 2022.11.17ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினைச் செய்து கொள்ள வேண்டும்.
17. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## 2023ம் ஆண்டுக்கு சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான குத்தகை அட்டவணை

| இல | சந்தைகள் (துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்களுடன்), இறைச்சிக்கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2023 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர்ந்த) ரூபா. |
|---|---|---|---|---|
| | நல்லூர் உப அலுவலகம் | | | |
| 1 | திருநெல்வேலிச்சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 15,000.00 | 32,258,648.40 |
| 2 | திருநெல்வேலிச்சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 882,453.00 |
| 3 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 01. | 500.00 | 5,000.00 | 122,113.20 |
| 4 | திருநெல்வேலிச்சந்தை கோழியிறைச்சிக் கடை இல 02. | 500.00 | 5,000.00 | 154,398.75 |
| | கொக்குவில் உப அலுவலகம் | | | |
| 1 | கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கர வண்டிப்பாதுகாப்பு நிலையத்துடன்) | 1,000.00 | 10,000.00 | 1,478,015.61 |
| 2 | கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 565,191.00 |
| 3 | கொக்குவில் சந்தை கோழியிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 493614.66 |
| 4 | கொக்குவில் உப அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 500.00 | 5,000.00 | 773,311.00 |
| 5 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 01 | 500.00 | 5,000.00 | 142,200.00 |
| 6 | கோண்டாவில் ஸ்ரேசனடி ஆட்டிறைச்சிக் கடை இல 02 | 500.00 | 5,000.00 | 142,200.00 |
| 7 | கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக் கடை, | 500.00 | 5,000.00 | 1,875,100.00 |
| 8 | கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 5,000.00 | 975,260.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.ப.மயூரன்
தவிசாளர், நல்லூர் பிரதேச சபை, கொக்குவில்.

(c-5087) 2022.10.14

## 10 மாவட்டங்க...

லைத்தீவு, புத்தளம் மற்றும் கேகாலை ஆகிய மாவட்டங்களே டெங்கு அபாய பிரதேசங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த மாவட்டங்களில் கடந்த வாரம் 1,152 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டதாக தேசிய டெங்கு ஒழிப்பு பணியகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## யாழ்ப்பாண பனம்...

லொகான் ரத்வத்த நகைச்சுவையாக தெரிவித்தார்.

பனை அபிவிருத்தி சபையின் தலைமை அலுவலகக் கட்டடம் நேற்று கைதடியில் திறந்து வைக்கப்பட்டபோது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனை நகைச்சுவையாக தெரிவித்தார்.

பல்லாயிரக்கணக்கான பனைமரங்கள் உள்ள இடமாக யாழ்ப்பாணமும் காணப் படுகின்றது. இன்று (நேற்று) காலை நாங்கள் வந்து பனம்கள்ளைத் தேடிய போது யாழ்ப்பாணத்தில் பனம்கள்ளு எனக்கு கிடைக்கவில்லை என்றார்.

மேலும் தெரிவிக்கையில், இங்கே உற்பத்தி செய்யப்படும் பனை உற்பத்தி பொருட்களுக்கு மேற்குலக நாடுகளில் அதிக கேள்வி காணப்படுகின்றது. பனை அபிவிருத்தி கைத்தொழிலானது மிகவும் அபிவிருத்தி அடைவதோடு வடபகுதி மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்ற உதவ வேண்டும் என்றார். (ம-7,33)

## மக்களின் நிலைப்...

தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், தற்போதைய அர சாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணை இரத்தாகியுள்ளது. எனவே, மக்கள் ஆணையை மீளக் கோர வேண்டும். தேர்தலைக் காலந்தாழ்த்தினால் என்ன நடக்கும் என மக்கள் பாடமெடுத்திருக் கிறார்கள் எனவும் தெரிவித்தார்.

உரிய தினத்தில் தேர்தலை நடத்தா விட்டால் அதற்கு எதிராக பாராளுமன்ற த்துக்கு உள்ளேயும், வெளியிலும் போரா ட்டங்களை மேற்கொள்ளவும், சர்வதேச த்துக்கு செல்லவும் எதிர்க்கட்சிகள் கூட்டா கத் தீர்மானித்தள்ளன என்றார். (ம-7)

## எதிராக கருத்துக்...

இவரை சிங்கள மக்கள் சிறந்த தலை வராக கணிக்கவில்லை சிங்கள மக்கள் ஒரு நல்ல தலைவராக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் அவரிடம் இல்லை இனவாதத் திற்கு எதிராக சிங்கள மக்கள் தற்பொழுது எழும்பி இருக்கிறார்கள்.

தியாகி திலீபன் அவர்கள் இந்த மண் ணிலே உண்ணாவிரதம் இருந்து தன்னு யிரை மக்களுக்காக தியாகம் செய்தவர். இதே விமல் வீரவன்ச அவர்கள் இருந்த ஜே.வி.பி கட்சியும் போராடி இலங்கை யிலே கிளர்ச்சி செய்து இலங்கையில் இருக்கும் அரசாங்கத்தை கவிழ்ப்பதற்காக போராடி இறந்திருக்கிறார்கள்.

அவர்களை நினைவு கூருவதற்கு இந்த நாட்டில் ஒரு நியாயம் இருக்கின்றது என்றால் இந்த மண்ணிலே தமது இழ ந்து போன இறைமையை மீட்பதற்காக போராடிய ஒரு இளைஞர் பரம்பரையின் நினைவு நாளை நினைவுகூர ஏன் எமக்கு தடை விதிக்கப்படுகிறது.

விமல் வீரவன்ச முதலில் பாடசாலை செல்ல வேண்டும் பாடசாலை சென்றால் தான் இந்த அறிவுகள் தெரியும் விமல் வீரவன்ச போன்றவர்களுக்கு பாடசாலை அனுப்பி புனர்வாழ்வு பெற்று வந்தால் தான் உலகம் என்ன நாடு என்ன வர லாறு என்ன என்பது புரியும், விமல் வீரவன்ச போன்றவர்களின் கூச்சலுக்காக நாங்கள் பயப்படவேண்டியதில்லை.

எமது பணிகள் எந்தவொரு அச்சமும் இல்லாமல் தொடரும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித் திருந்தார். (ம-7)

## வட பகுதிக்கு...

னெடுக்கப்படும் அனைத்து வேலைத் திட்டங்களின் போதும் வடபகுதியில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலை திட்டங்கள் தொடர்பில் நாங்கள் எம் மாலான சகல ஒத்துழைப்பினையும் வழங்கிவருகிறோம்.

வடக்கு மக்களின் மிகவும் முக்கிய மான வாழ்வாதார கைத்தொழிலாக பனைசார் உற்பத்திப் பொருட்கள் காணப்ப டுகின்றது.

வடக்கில் 12 ஆயிரம் குடும்பங்கள் பனை சார்ந்த கைத்தொழிலை நம்பி வாழ்ந்து வருகின்றார்கள். குறித்த பனை சார் உற்பத்தியினை நம்பி வாழ்ந்து வரும் குடும்பங்களின் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்குத் தேவையான உதவி களை வழங்கும் வேலைத்திட்டத்தினை இந்த அரசாங்கத்தில் முன்னெடுத்து வருகின்றோம்.

பனை அபிவிருத்திச் சபையினை முன் னோக்கி நகர்த்துவதற்கான வேலைத்திட் டங்களை முன்னெடுக்கவுள்ளோம். அதாவது நட்டத்தில் இயங்கிக் கொண்டு இருப்பதை முன்னேற்றுவதற்கு சில திட்டங்களை நடைமுறைப்படுத்த உள் ளோம். அத்தோடு பனம்கள்ளு உற்பத்தி யினை மேம்படுத்தி அதில் பெறும் வருமா னத்தினை எடுத்து சபையினை முன் னேற்றவுள்ளோம்.

பனைசார் உற்பத்தி மற்றும் பனம்கள் ளுக்கு இலங்கையில் மாத்திரமல்ல உலக நாடுகள் அனைத்திலும் கேள்வி அதிக மாக காணப்படுகின்றது. நான் அமைச்ச ராக பதவியேற்ற பின் நான்கு தடவைகள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து பனை சார் உற்பத்தி தொடர்பான வேலைத்திட் டங்கள் தொடர்பில் ஆராய்ந்துள்ளேன். பனை அபிவிருத்திச் சபையினை நிதி ரீதியிலே முன்னிலைக்கு கொண்டு வருவ தற்கு பனை சார் உற்பத்தி கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு அனைவரது பங்க ளிப்பும் அவசியமாகும் என்றார்.

மேலும் குறித்த கட்டடத் தொகுதியின் நிர்மாணப் பணிகள் முழுமையாக பூர்த் தியடையாத நிலையில் கீழ்த்தளம் மாத் திரம் திறந்துவைக்கப்பட்ட நிலையில் இரண்டாம் தளம் விரைவில் கட்டி முடிக்கப் படும் என்றார். (ம-7,33,104)

## வெடுக்குநாறி...

வத்துடன் தொடர் புடைய உண்மை யான குற்றவாளி களை ஆயர்படுத் துமாறு வவுனியா நீதவான் பொலி ஸாருக்கு உத்தர விட்டுள்ளார்.

வவுனியா நெடு ங்கேணி வெடுக்கு நாறிமலையில்வழி பாடுகளை மேற்கொ ள்வதற்கு தொல் பொருட்திணைக் களமும், நெடுங் கேணி பொலிஸா ரும்பல்வேறு தடை களை ஏற்படுத்தி வந்ததுடன் தொல் பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதவான் நீதிமன் றில் வழக்கினை யும் தாக்கல் செய்தி ருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை கள் வவுனியா நீதிம ன்றில் தொடர்ச்சி யாக இடம்பெற்று வந்த நிலையில் நேற்று குறித்த வழ க்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

இதன் போது குறித்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஆலயத்தின் பூசகர் தம்பிராசா மதிமுக ராசா, மற்றும் நிர் வாகத்தினர்க ளான தமிழ்செல் வன், சசி ஆகி யோர் வழக்கிலிரு ந்து தற்காலிகமாக விடுதலை செய்யப் பட்டுள்ளதுடன், குறித்த சம்பவத்து டன் தொடர்புடைய உண்மையான குற்றவாளிகள் யார் என்பதை ஆதாரங்களுடன் கண்டறிந்து நீதிமன்றத்தில் ஆயர்ப்படுத்துமாறு பொலிஸாருக்கு நீதவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை குறித்த வழக்கு தொடர் பாகநெடுங்கேணி பொலிஸாரால் முன்னெ டுக்கப்படுகின்ற விசாரணைகளுக்கு ஆல யத்தின் நிர்வாகத்தினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் நீதவானால் உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)

## இலங்கை...

அழைப்பின் பேரில் இலங்கைக்கு வந் துள்ள எரிக் சொல்ஹெய்மிடம் ஆங்கில ஊடக மொன்று மின்னஞ்சலில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் மண்சரிவு மற்றும் தீவிர வானிலை அச்சுறுத்தல்கள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் காலநிலை மாற் றத்தை கையாள்வது பசுமையான வேலை களை உருவாக்குவதற்கும் அனைத்து இலங்கையர்களையும் ஒரு ஒழுக்கமான நடுத்தர வர்க்க வாழ்க்கைக்கு கொண்டு வருவதற்கும் 'ஒரு மகத்தான வாய்ப்பு' என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2022/10/13
சீட்டிழுப்பு இலக்கம் 4907
G 7 3 4 7 2 3
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 216
கடகம் 01 10 31 48 கடகம்

மெகா பவர்
திகதி 13/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1255
Q 13 29 31 38 65

கொவிசெத
திகதி 2022.10.13
சீட்டிழுப்பு இலக்கம் 3149
Y 11 41 62 72
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2022.10.13
சீட்டிழுப்பு இலக்கம் - 937
V 04 06 44 80

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 13/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1362
தனுசு 0 9 4 9 3 5
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1708
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2022.10.13
ரூ. 3,267,600/-
17 19 31 40 Q

சனிதா
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.10.13
சீட்டிழுப்பு இல: 4043
வர்ணம்: சிவப்பு
ரூ. 4,235,220/-
05 08 13 50 X

ராசி
ரூ. 3,780,458.20
திகதி 2022-10-13
வெற்றி வாரம் 3594
வர்ணம் கபிலம்
28 36 37 57
ரூ. 8,347,240/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
U 16 20 29 33 57
1058
செம்மஞ்சள்
2022.10.13
வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 269,277,941.80
011-2 333 546-47
Web: www.dlb.lk

සංවර්ධන වාසනාව
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 535
திகதி 2022-10-13
வர்ணம் நீலம்
V 13 16 31 02
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 13,336,440/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1882
நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2022.10.13
தினம் வியாழக்கிழமை
K 14 25 43 53
ரூ. 2,356,820/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பான வாடிக்கையாளருக்கு

மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

பான்ஸிப் பொருட்கள், சில்வர் பொருட்கள், பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள், மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள், பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask), அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள், தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள், கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

## சரவணபவன் பான்ஸி ஹவுஸ்

இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
( செம்மா தெரு ஒழுங்கை )
யாழ்ப்பாணம்.

(13106)

உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன் )

**021 315 5900, 077 468 3354**

---

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்

- ✓ ONLINE APPLICATIONS
- ✓ VISA APPOINTMENTS
- ✓ PASSPORT APPLICATION
- ✓ POLICE CLEARANCE

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA

கனடா ஐரோப்பா ஜேர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Visa Extension

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

(C-4921)

---

## அமெரிக்க லொத்தர் இலவச விசா

அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புகள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்

ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

V2 Travels and Tours எமது Facebook

(C-4921)

V2 Travels 0768226240 0768226244

---

## கணக்கீடு A/L 2022/Day

மேந்தலை : சனி, ஞாயிறு 11 - 01 மணி வரை
கம்பனி : திங்கள், வெள்ளி 2.30 p.m
கருத்தரங்கு ஒவ்வொரு புதன் 2.30 P.m
அலகுப் பரீட்சை சனி, ஞாயிறு 1 p.m

ஆசிரியர் S. தவா

B.Com(Hons) (Acc.spl) PGDE, M.A in Edu (Hons)

கருத்தரங்குக்கு என கட்டணம் தனியாக அறவிடாத ஒரேயொரு கணக்கீட்டு ஆசிரியர். முன்னணிப் பெறுபேறுகளின் சொந்தக்கார ஆசிரியரின் கற்பித்தலில் இணைந்து பயன் பெறுக. வெளி மாணவர்களும் பங்கு கொள்ளலாம்.

DCM யாழ். நகர்
யா/ வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
நிர்வாகம் - 077 778 9815, 077 239 5858

(C-5089)

---

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி பிரதீபா இராஜசேகரம்
அவர்களின் அன்புத் தந்தையார்

அமரர்

### வேலுப்பிள்ளை தெய்வேந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/ ஆனைப்பந்தி மெ.மி வித்தியாலயம்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்

(13105)

---

## ராஜ...

வரசர்களே கரை சேர்ந்துள்ளனர்.

அந்த இளவர சர்கள், போராட் டத்தில் ஈடுபட்ட இளம்தலைமுறை யினரை அடக்க வேண்டும் என தற்போது கூறு கின்றனர். 220 லட்சம் மக்கள் அநாதரவாக்கப் பட்டுள்ள சந்தர்ப் பத்தில் ராஜபக்ஷ வினர் மற்றும் அவரது தலை முறையினர் கரை சேர்ந்துள்ளனர்.

இந்த இளவர சர்களின் ஆலோ சனைகளுக்கு அமைய இளை ஞர்களுக்கு புனர் வாழ்வு வழங்க புனர்வாழ்வு செய லகம் ஒன்றை கொண்டு வர தயாராகி வரு கின்றனர். எதிர்க் கட்சி என்ற வகை யில் இதனை எதி ர்க்கின்றோம் என் றார். (ம-7)

---

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

## பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு - ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

(13117)

---

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- தரகர் தேவையில்லை.
- A09 வீதி முகப்புடன் காணி உள்ளது.

தொடர்பு

**077 874 8135**
**077 408 2649**

---

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 33 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

தொடர்பு

**077 911 6983**
**076 755 8606**

(13108)

---

**யாழ்ப்பாணம் தாவடி சந்திக்கு அருகாமையில் 2 பரப்பு காணி விற்பனைக்கு**

- K.K.S வீதியில் இருந்து இரண்டாவது காணி
- பார்வையிடும் நேரம்:- காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

தொடர்பு

**077 623 4204**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.